**மட்டக்களப்பு மாநகர சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபைச் சட்டத்தின் (252 ஆம் அத்தியாயம்) 219 ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாநகர சபையின் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான பொது நூலகங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 10,015,508 பெறுமதியான 11,878 புத்தகங்கள் நன்கொடையாக கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், கணக்குகளில் சொத்தாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்நிதியாண்டில் சொத்தாக வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நூலகப் புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாக காணப்பட்ட தொலைத் தொடர்பு கோபுரங்களுக்கான வியாபார வரித் தொகையான ரூபா 302,500 நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

#### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக் சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | மீளாய்வாண்டு இறுதிவரை பல்வேறுபட்ட தேவைகளுக்கு வைப்பிலிடப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக கணக்குகளில் காட்டப்பட்டுவரும் தொகை ரூபா 3,115,424 இவ் வைப்புக்களை கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வைப்புக்களை கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252) பிரிவு 37(அ) பிரகாரம் | நினைவுத் தூபிகளை அல்லது சிலைகளை நிர்மாணிப்பதற்கு முன்னர் அமைச்சரின் அனுமதியினை பெறவேண்டும். எனினும், சபையின் நிர்வாக எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்டு காணப்படும் 05 எண்ணிக்கையான சிலைகளுக்கு அமைச்சரின் முன் அனுமதியினை பெற்றிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவீனத்தை மிகைத்த வருமானம் ரூபா 156,875,725 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த வருமானம் ரூபா 153,674,005 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாற ான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 41,000,000 | 46,577,956 | 36,727,599 | 44,644,197 | 36,000,000 | 42,796,971 | 31,311,721 | 34,793,840 |
| வாடகைகள் | 27,250,100 | 24,475,385 | 23,566,524 | 16,492,094 | 6,050,000 | 10,466,896 | 5,796,715 | 15,583,233 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 16,511,000 | 23,152,047 | 23,740,059 | 2,066,751 | 15,000,000 | 13,491,807 | 12,220,807 | 1,654,762 |
| ஏனைய வருமானம் | 159,827,000 | 253,065,050 | 239,269,827 | 13,795,223 | 18,000,000 | 18,068,228 | 18,068,228 | 0 |
| | 244,588,100 | 347,270,438 | 323,304,009 | 76,998,265 | 75,050,000 | 84,823,902 | 67,397,471 | 52,031,835 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **உத்தரவுப் பத்திரக் கட்டணம்** மாநகரசபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 247(c) இன் பிரகாரம் 05 எண்ணிக்கையான தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வியாபார உரிமைக் கட்டணத் தொகையான ரூபா 302,500 சபையினால் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான வியாபார உரிமைக் கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்** | | |
| **(i)** | மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2022 திசெம்பர் 31 வரை ரூபா 63,253,640 தொகையான முத்திரைக் கட்டணம் பெறவேண்டியிருந்தது. | முத்திரைத் தீர்வைகளை பெறும் பொருட்டு இறைவரித் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | முத்திரைத் தீர்வை நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ii)** | சான்றிதழ்கள் பொருந்தாமை மற்றும் வங்கியில் வைப்பு செய்தமைக்கான ஆவணங்கள் இல்லாமை காரணமாக, மீளாய்வாண்டின் இறுதிவரை கிடைக்கப்பெறவேண்டிய முத்திரைத் தீர்வைக் கட்டணத் தொகையான ரூபா 30,177,650 இனை மீளப்பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | முத்திரைத் தீர்வை நிலுவைத் தொகையை அறவிட கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |

**(இ) ஏனைய வருமானம்**

| | | | |
|---|---|---|---|
| (i) | சபையினால் ரூபா 2,639,099 செலவீட்டில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கருவப்பங்கேணி பொதுச் சந்தை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கருவப்பங்கேணி பொதுச் சந்தையை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | சபைக்குச் சொந்தமான கல்லடி சிறுவர் பூங்காவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 12 கடைகளில் 09 கடைகள் மீளாய்வாண்டில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த கடைகளுக்கான கேள்வி விண்ணப்பங்கள் பொது மக்களிடமிருந்து இதுவரை கிடைக்கப்பெறவில்லை. | கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரைகள்** | **சிபார்சுகள்** |
|---|---|---|---|
| (அ) | மாநகர சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட காணிகளின் உபபிரிகையிடல் மூலமாக சபைக்கு கிடைக்கப்பெற்ற 41 எண்ணிக்கையான காணிகளில் 16 காணிகள் மாத்திரமே எல்லையிடப்பட்டுள்ளன. ஏனைய காணிகளை சபையின் காணியாக அடையாளப்படுத்தி ‘‘மாநகர சபைக்கு சொந்தமானவை’’ எனப் பெயர்ப்பலகைகள் இடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் அடையாளம் காணப்பட்டு எல்லையிடுவதற்காக வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. | சபையின் காணியாக அடையாளப்படுத்தி ‘‘மாநகர சபைக்கு சொந்தமானவை’’ எனப் பெயர்ப்பலகைகள் இடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட பொதுச்சுகாதார பரிசோதகர்களுக்கான கையேட்டின் அத்தியாயம் 4 இன் பிரிவு 4.2 இன் பிரகாரம் குறித்த பொதுச் சுகாதார பிரிவுக்குட்பட்ட சபையில் கட்டட அனுமதிக்காக காற்றோட்ட வசதி மற்றும் கழிவகற்றல் வசதி தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை பெறப்பட்டு அனுமதி வழங்கப்பட வேண்டும். எனினும், கடந்த 05 வருடங்களாக சுகாதார வைத்திய அதிகாரியின் அறிக்கை பெறப்படாமல் கட்ட விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | எதிர்வரும் காலத்தில் சுகாதார வைத்திய அதிகாரி திட்டமிடல் குழுக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான நடவடிக்கை எம்மால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மாநகர எல்லைக்குட்பட்ட தனியார் காணியை உபபிரிகை செய்து விற்பனை செய்வது தொடர்பில் மாநகர சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 97 பேர்ச் அளவான ஐந்து காணிகள் முன்னாள் ஆணையாளரினால் தனது மற்றும் அவரது மனைவியின் பெயரிலும் 2003 தொடக்கம் 2006 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மாற்றம் செய்யப்பட்டிருந்தன. இவ்விடயம் தொடர்பாக முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், சபையினால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக இலஞ்சம், ஊழல் ஆணைக்குழுவினால் முடிவுறுத்தப்பட்டுள்ளது என எமக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | சபைக்குச் சொந்தமான காணிகளை சபையின் பெயருக்கு உரிமையாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 14000 L டீசல் தாங்கி மற்றும் டீசல் பம் இயந்திரம் என்பனவற்றின் பெறுமதி சொத்தாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிக்கூற்றில் சொத்தாக வெளிப்படுத்தப்படும். | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும்.. |
| (உ) | கல்லடி பொது நூலகத்தில் 190 புத்தகங்கள் இழக்கப்பட்டிருந்ததுடன், இவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களிலிருந்து அகற்றல் செய்யப்பட்டிருக்கவில்லை.. | நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. | சொத்துக்களின் நியாயப்பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொத்தமான இழுவை பெட்டிகள், பவுசர் உள்ளடங்கலான 50 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் வருமான உத்தரவாதப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | வருடாந்த வருமான உத்தரவாதப் பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வேறு அரச நிறுவனங்களிடமிருந்து நன்கொடையாக சபைக்கு கிடைக்கப்பெற்ற 18 எண்ணிக்கையான வாகனங்கள் சபையின் பெயருக்கு சொத்தாக உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் சீர் செய்து பெயர்மாற்றத்திற்கான நடிவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வாகனங்களை சபையின் சொத்தாக உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபையின் சொத்துக்களாக 54 எண்ணிக்கைான சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், அவற்றின் உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் சபையில் பௌதீக ரீதியாக காணப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்படும். | உரிமையினை உறுதிப்படுத்தும் ஆவணங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **(அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 33 பதவிகளுக்கு 164 வெற்றிடங்களும், 09 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | காலத்துக்குக் காலம் எம்மால் ஆளணி தொடர்பான விபரம் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம். நிர்வாகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ) ஊழியர் கடன்**<br>மீளாய்வான்டின் திசைம்பர் 31 இன் உள்ளவாரு மரணித்த ஊழியர், நீண்டகாலமாக தொழில் வறிதாக்கப்பட்ட மற்றும் ஏனைய ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் நிலுவை ரூபா 594,147 தொகையினை உரிய நபர்களிடமிருந்து அல்லது பிணையாளரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஊழியர் கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் திருத்தப்பட்டவாறான 2000 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம், திருப்பெருந்துறை திண்மக்கழிவு நிலையத்திற்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் மீளாய்வாண்டின் இறுதிவரை பெறப்பட்டிருக்கவில்லை. | விரைவில் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்படுகிறது. | சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) BMC/com/Gen/Sec.2022 ஆம் இலக்க 2022 யூன் 20ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம், ஆணையாளரினால் National Engineering research and Development center (NERD) இற்கு சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைக்கான கோரிக்கையொன்று கள்ளியங்காடு மயானத்தின் தகனசாலை தொடர்பில் அனுப்பப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சுற்றாடலுக்கு பாதிப்பற்ற வகையில் புகை போக்கியும், Champer உம் அமைக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தின் தாக்க விளைவுகள் தொடர்பாக சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |